# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


**முன்னிலை : திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 23 /2017**

திரு. எம். அன்பழகன்,
த/பெ முனுசாமி,
18/20, சுபேதார் தெரு,
கள்ளக்குறிச்சி – 606 202. . . . மேல்முறையீட்டாளர்
(திரு. எம். அன்பழகன்)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
கள்ளக்குறிச்சி மின் பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சிவாஜி நகர், லயன்ஸ் கிளப் பில்டிங்,
கள்ளக்குறிச்சி – 606 202. . . . எதிர்மனுதாரர்
(திரு. B. வெங்கடேஸ்வரன், செயற்பொறியாளர்/கள்ளக்குறிச்சி )

**கேட்புரை நாள் : 23–5–2017**

**ஆணை நாள் : 07.08.2017**

திரு. எம். அன்பழகன், த/பெ முனுசாமி, கள்ளக்குறிச்சி அவர்களின் 8.3.2017 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.23/2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 23.5.2017 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## <u>ஆணை</u>

1. <u>**மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**</u>

மேல்முறையீட்டாளருக்கு அவரின் விவசாய மின்இணைப்பு பெற தயார்நிலையை பதிவு செய்ய உரிய கால அவகாசம் அளித்து தவறுதலாக பதிவு செய்த கள்ளகுறிச்சி கிராம எண்.3/4ல் உள்ள கிணற்றிற்கு பதிலாக சோமாண்டர் குடி கிராம புல எண்.67/5Aல் உள்ள போர்வெல்லுக்கு ச.எண். மாற்றம் செய்து கொடுத்து மின்இணைப்பு அளிக்க உத்தரவிடுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

2. <u>**வழக்கின் சுருக்கம்:**</u>

2.1 திரு. எம். அன்பழகன், அவர்கள் தன்னுடைய கள்ளக்குறிச்சி புல எண்.3/4ல் உள்ள கிணற்றிற்கு விவசாய மின்இணைப்பு கோரி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். அந்த விண்ணபத்தின் பதிவு எண்.007/28.9.1988 ஆகும்.

2.2 மேற்கண்ட விண்ணபத்திற்கு தயார்நிலையை பதிவு செய்ய 1.11.2010 நாளிட்ட அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. அந்த அறிவிப்பின்படி தயார்நிலையை பதிவு செய்ய கடைசி நாள் 3.12.2010 ஆகும்.

2.3 மேல்முறையீட்டாளர் சோமாண்டார் குடி கிராம ச.எண்.67/5A ற்கு பதிலாக கள்ளக்குறிச்சி கிராம ச.எண்.3/4ல் உள்ள கிணற்றிற்கு தவறுதலாக விண்ணபம் சமர்ப்பித்து விட்டதால் மேற்கண்ட விண்ணபத்தின் சர்வே எண்.67/5A என்று மாற்றம் செய்து அவருக்கு தயார் நிலையை பதிவு செய்ய கால அவகாசமும் வேண்டி 28.4.2014ல் விண்ணப்பம் அளித்துள்ளார்.

2.4 மேற்கண்ட விண்ணப்பம் சம்பந்தமாக கோரப்பட்ட தேவையான ஆவணங்கள் சமர்ப்பித்தும் அவரின் தயார்நிலையை பதிவு செய்ய அறிவிப்பு கொடுக்கப்படவில்லை என்பதால்

மேல்முறையீட்டாளர் தன்னுடைய முறையீட்டை கல்லிடைக்குறிச்சி மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

2.5 மன்றம் அவரின் 2.12.2016 நாளிட்ட மனுவிற்கு இரண்டு மாத காலம் ஆகியும் தீர்வு எதையும் தரவில்லை என்பதால் 8.3.2017 நாளிட்ட இந்த மேல்முறையீட்டை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

2.6 மன்றத்திடம் மனு செய்து 50 நாட்களுக்குள் எந்த பதிலும் பெறப்படவில்லை என்பதால் மன்ற விதி 17(4)(a)ன் படி மேற்கண்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.23 /2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 3. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:

3.1 அவர் 28.9.1988 அன்று விவசாய மின் இணைப்பு வேண்டி அவருக்கு சொந்தமான சோமாண்டர் குடி கிராம புல எண். 67/5Aல் இருந்த கிணற்றிற்கு பதிலாக அவருக்கு கூட்டாக பாத்தியப்பட்ட கள்ளக்குறிச்சி கிராம புல எண். 3/4ல் உள்ள கிணற்றிற்கு தவறுதலாக கிராம நிர்வாக அலுவலர் அளித்த ஆவணங்களை கொண்டு பதிவு எண்.007/28.9.1988 அன்று விண்ணப்பம் பதிவு செய்து விட்டார்.

3.2 ஏற்கனவே அவருக்கு கூட்டாக பாத்தியப்பட்ட கிணற்றில் அவரது அண்ணார் பெயரில் உள்ள மின்இணைப்பில் நான்கில் ஒரு பங்கு பாத்தியம் உள்ளது. அவருக்கு 90 நாள் அறிக்கை 1.11.2010 அன்று அளிக்கப்பட்டது. அப்போதுதான் அவர் விண்ணப்பம் தவறாக பதிவு செய்து விட்டதை அறிய பெற்றார் .

3.3 ஆகவே அவரது நிலையை தெளிவாக குறிப்பிட்டு அவரது அறியாமையினாலும் கிராம நிர்வாக அலுவலர் அளித்த சான்றிதழ்களினாலும் தவறான கள்ளக்குறிச்சி கிராம சர்வே எண் 3/4ல் உள்ள கிணற்றிற்கு விண்ணப்பம் பதிவு செய்து விட்டதாலும் இரண்டு கிராம

சர்வே எண்கள் உள்ள நிலங்களும் அருகருகே உள்ளதாலேயே இந்த தவறு நேர்ந்து விட்டது என தெரிவித்து அவருக்கு கள்ளக்குறிச்சி கிராம ச.எண்.3/4ல் உள்ள கிணற்றிற்கு பதிவு செய்த விண்ணப்பத்தை அவருக்கு சொந்தமான சோமாண்டர் குடிகிராம ச.எண்.67/5Aல் மாற்றி தரும்படி வேண்டி தேவையான ஆதாரங்களுடன் 28.4.2014 அன்று விண்ணப்பம் அளித்தார் மேலும், தயார் நிலையை பதிவு செய்ய உரிய கால அவகாசம் அளிக்கும் படியும் கேட்டிருந்தார்.

3.4 அவரது விண்ணப்பத்தை பெற்றுக் கொண்டு ஆய்வு செய்து பின் க.எண்/உமிபொ/இப/சபட்டு/கோ.கட்டு/அ.எண்.220/2015, நாள்.25.2.2015 வாயிலாக உதவி பொறியாளர்/இப/சடையம்பட்டு அவர்கள்

(i) கள்ளக்குறிச்சி புல எண்.3/4 மற்றும் சோமாண்டர் குடி கிராம புல எண். 67/5Aக்கு உண்டான வில்லங்க சான்று 28.9.1988ல் இருந்தும்,

(ii) கிரய பத்திரத்தில் சோமாண்டர் குடி புல எண்.67/5Aல் கிணறு உள்ளதாக குறிப்பிடாததற்கு காரணத்தையும் கேட்டு கடிதம் அனுப்பியிருந்தார். ஆகவே உரிய சான்றிதழ்களை பெற்று நேரடியாக உதவி பொறியாளர்/சடையம்பட்டு அவர்களிடம் அளித்துவிட்டார்.

3.5 மீண்டும் க.உ.மி.பெ/இப/ச.பட்டு/ஆக/அ.எண்.104–1/15, நாள் 22.7.2015 வாயிலாக கூடுதல் ஆவணங்கள் கேட்டு பழைய சர்வே எண். மற்றும் புல எண். உள்ள வருவாய் கிராமத்திற்கு புதிய வருவாய் ஆவணங்கள் (கம்யூட்டர் சிட்டா அ.பதிவேடு VAO சான்று) தரவும் பாக பிரிவினை பத்திரத்தில் மொத்தம் 56 பக்கம் என உள்ளது ஆனால், 47 பக்கம் மட்டுமே இணைக்கப்பட்டுள்ளது. எனவே, புதிய பாக பிரிவினை பத்திரம் வேண்டும் எனவும் FMBல் சர்வே எண்.67/5Aல் இரண்டு போர் கிணறு உள்ளது. இதில் எந்த போர் கிணற்றிற்கு மின்இணைப்பு வேண்டும் என FMB வரைபடத்தில் குறிப்பிடவும் மேலும் ஒரு VAO சான்று பெற்று அளிக்கவும் என குறிப்பிட்டு மேற்கண்ட குறைகளை நிவர்த்தி செய்ய உரிய வருவாய்

ஆவணங்களை உடனே அளித்தால் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்க இயலும் என கனிவுடன் தெரிவித்து கொள்வதாக கூறி கடிதம் பெறப்பட்டது. இந்த அனைத்து விபரங்களும் தயார் செய்து உடனடியாக சடையம்பட்டு உதவிபொறியாளர் அவர்களிடம் நேரடியாக அளிக்கப்பட்டது.

3.6 அவரும் அதனை பெற்றுக்கொண்டு தயார்நிலையை பதிவுசெய்ய மேல் நடவடிக்கை எடுப்பதாக கூறினார். ஆனால், நாட்கள் பல கடந்தும் அவருக்கு தயர் நிலையை பதிவு செய்ய எந்த ஒரு அறிவிப்பு கடிதமும் அளிக்கப்படவில்லை.

3.7 இதனை தெரிவித்து அவர் தலைவர், நுகர்வோர் குறைதீர் மன்றத்திற்கு 2.12.2016ல் ஒரு பதிவு தபால் அனுப்பினார். ஆனால், இரண்டு மாதங்களுக்கு மேல் ஆகியும் அவருக்கு தயார் நிலையை பதிவு செய்ய எந்த ஒரு தீர்வும் செய்யப்படவில்லை.

3.8 மேலும், அவர் 28.4.2014 அன்றே மேற்படி மாற்றம் வேண்டியும் கால நீட்டிப்பு வேண்டியும் விண்ணப்பம் அளித்திருந்தும் ஏறக்குறைய மூன்று வருடம் ஆகியும் மின் வாரியத்தால் அவரது குறை நிவர்த்தி செய்யப்படாமல் இருப்பதால் அவருக்கு சிறப்பு முன்னுரிமை அளித்து மின் இணைப்பு வழங்க ஆவண செய்யுமாறு கேட்டுக் கொள்கிறார்.

4. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் :</u>

4.1 திரு. எம். அன்பழகன், த/பெ முனுசாமி கள்ளக்குறிச்சி அவர்களின் விவசாய மின்இணைப்பு விண்ணப்பம் பெறப்பட்டு கள்ளக்குறிச்சி கோட்டத்தில் வரிசை எண்.7/28.9.1988 என பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் சர்வே எண்.3/4 வருவாய் கிராமம் கள்ளக்குறிச்சி ஆகும்.

4.2 திரு. எம். அன்பழகன் அவர்களுக்கு 2010 ஆண்டில் வழங்கப்பட்ட சிறப்பு முன்னுரிமை அடிப்படையிலான விவசாய மின்இணைப்பு வழங்க 1.11.2010ல் தயார் நிலை நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது.

4.3 விண்ணப்பதாரர் திரு. எம். அன்பழகன் விவசாய மின் இணைப்பிற்கு விண்ணப்பித்த காலத்தில் சோமாண்டர்குடி சர்வே எண்.67/5Aல் என விண்ணப்பிப்பதற்கு பதிலாக கள்ளக்குறிச்சி சர்வே எண்.3/4 என விண்ணப்பித்து விட்டதாக கூறி சர்வே எண். மாற்றம் கோரியதை தொடர்ந்து 20.3.2015 நாளிட்ட ஆணையின்படி சர்வே மாற்றம் செயற்பொறியாளர்/ இப/ கள்ளக்குறிச்சி அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி விண்ணப்பத்திற்கு 3.6.2015 நாளிட்ட கடிதத்தின்படி கால நீட்டிப்பு கோப்பு மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்திற்கு பெறப்பட்டதில் உள்ள குறைகளை சுட்டிகாட்டப்பட்டு 4.7.2015 நாளிட்ட கடிதம் மூலம் திருப்பப்பட்டது. அதில் சர்வே எண்.3/4 ல் உள்ள கிணற்றில் திரு. ஜெகதீசன் என்பவர் பெயரில் மின்இணைப்பு இருப்பதாக கூறி பட்டாவில் திரு. ஜெகதீசன் பெயர் விடுபட்டு உள்ளது. என்றும் வட்டாட்சியர் சான்றிலும் திரு. அன்பழகன் திரு. ராஜேந்திரன் திரு. கிருஷ்ணமூர்த்தி பெயர் மட்டுமே உள்ளது. திரு. ஜெகதீசன் பெயர் இல்லை என கூறியும் பாகப்பிரிவினை பத்திரம் முழுமையாக இல்லை என்றும் மொத்தம் உள்ள 56 பக்கத்தில் 47 பக்கம் மட்டுமே உள்ளது என்றும் வரைபடத்தில் சர்வே எண்.67/5Aல் இரண்டு பேர்கள் உள்ளது என்றும் கூறி சரியான விபரங்கள் அனுப்பி வைக்க கோப்பு செயற்பொறியாளர் /இப/கள்ளகுறிச்சி அவர்களுக்கு திருப்பப்பட்டது.

4.4 22.12.2015ல் தலைமை பொறியாளர் அவர்களின் குறிப்பாணை படி மேற்படி கால நீட்டிப்பு கோப்பு குறைகள் சுட்டிகாட்டப்பட்டு திருப்பப்பட்டது அதில், “பாகப்பிரிவினை பத்திரப்படி சர்வே எண்.3/4 கள்ளக்குறிச்சியில் (1.66 சென்ட் மொத்தம்) 1.56 சென்ட் நிலம் திரு. ஜெகதீசன் அவர்களுக்கு ஷெட்யூல்படி உரிமையும் F. ஷெட்யூல்படி சர்வே எண்.3/4ல் மீதமுள்ள 10 சென்ட் அதிலுள்ள சதுர கிணறு மற்றும் மின்இணைப்பு எண்.127 ஆகியவை திரு. ஜெகதீசன் திரு. அன்பழகன், திரு. ராஜேந்திரன், திரு. மனோகரன் ஆகியோருக்கு சொந்தம், நால்வருக்கும் பொதுவான சொத்து என பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, சர்வே எண்.3/4 ல் உள்ள

கிணறும் மின்இணைப்பும் திரு. அன்பழனுக்கு உரிமையாக உள்ள பட்சத்தில் விண்ணபத்தில் தவறுதலாக பதிவு செய்ததால் சர்வே எண். மாற்றம் செயற்பொறியாளரால் அனுமதிக்கப்பட்டு மேற்பார்வை பொறியாளரால் காலநீட்டிப்பு கருத்துரு பரிந்துரை செய்யப்பட்டு உள்ளது முரணாக உள்ளது'' என குறிப்பிடப்பட்டுள்ளது.

4.5 இக்கோப்பினை கள்ளக்குறிச்சி கோட்டத்திற்கு திருப்பப்பட்டு குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு மேற்கண்ட கோப்பு மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்திற்கு 22.3.2016ல் பெறப்பட்டது அதில், ''F ஷெட்யூல்படி சர்வே எண்.3/4ல் உள்ள 10 செண்ட் நிலம் மற்றும் அதிலுள்ள கிணறும் திரு. ஜெகதீசன் திரு. அன்பழகன், திரு. ராஜேந்திரன் திரு. மனோகரன் ஆகியோருக்கு கூட்டு எனவும், அதிலுள்ள மின்இணைப்பு எண்.127 திரு. ஜெகதீசன் என்பவருக்கு மட்டுமே சொந்தம் எனவும் பாகப்பிவினை பத்திர பக்க எண்.12ல் உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து தலைமை பொறியாளர்/பகிர்மானம்/விழுப்புரம் அவர்களுக்கு மேற்படி கோப்பு மேற்பார்வை பொறியாளர், கள்ளக்குறிச்சி மின்பகிர்மான வட்டம் அலுவலகம் மூலம் செயற்பொறியாளர்/கள்ளக்குறிச்சி அவர்களின் கடிதத்துடன் சமர்ப்பிக்கப்பட்டது.

4.6 மீண்டும் கால நீட்டிப்பு கோப்பு குறைகள் சுட்டிக்காட்டப்பட்டு 15.7.2016ல் தலைமை பொறியாளர்/ பகிர்மானம் விழுப்புரம் அலுவலகத்திலிருந்து திருப்பப்பட்டது. அதில் (1) ''மின்கட்டணம் நாம் அனைவரும் சரியாக செலவு செய்து கொள்ள வேண்டியது என பாகப்பிரிவினை பத்திரத்தில் பக்க எண்.12ல் குறிப்பிட்டுள்ளதால் மின்இணைப்பில் திரு. அன்பழகன் கூட்டு உள்ளது என்பது புலனாகிறது.

(2) ஒரு விண்ணப்பதாரருக்கு விண்ணப்ப காலத்தில் இருந்தே இரு இடங்களும் சொந்தமாக இருந்து மின்இணைப்பு ஏதும் பெறப்படாமல் இருந்தால் மட்டுமே தவறுதலாக விண்ணப்பித்த அடிப்படையில் சர்வே எண். மாற்றம் அனுமதி வழங்கலாம். இதுபோல் ஏற்கனவே ஒரு

மின்இணைப்பு கூட்டாக இருந்து வேறு கிணற்றுக்கு தவறாக விண்ணப்பிக்கப்பட்டது என சர்வே எண். மாற்றம் செய்ய வாரியத்தில் வழிவகை இல்லை என கூறப்பட்டு உள்ளது.

4.7 இந்நிலையில் திரு. எம். அன்பழகன் அவர்கள் Chairman, consumer Grievance Redressal Forum Kallakurichக்கு 2.12.2016ல் எவ்வித ஆவணங்களின்றி ஒரு கடிதம் அனுப்பி இருந்தார். கால நீட்டிப்பு கோப்பு நடைமுறையிலிருந்ததால்அவரது மனு நிலுவையில் வைக்கப்பட்டது.

4.8 சர்வே எண். மாற்றம் செய்ய வழிவகை இல்லை என தலைமைப்பொறியாளரின் அறிவுரையை தொடர்ந்து திரு. எம். அன்பழகன் அவர்களின் கோரிக்கையும் கோப்பினையும் உற்று நோக்கும் போது அவர் அளித்துள்ள கடிதங்கள் மற்றும் ஆவணங்களில் பத்திரப் பதிவான 12ம் பக்கத்தில் உள்ள சர்வே எண்.3/4 கள்ளக்குறிச்சி மட்டுமே எடுத்துக் கொள்ளப்பட்டு சர்வே எண். மாற்றம் செய்யப்பட்டு இருப்பது புலனாகிறது. ஆனால், 18.11.2004ம் ஆண்டின் பாகப்பிரிவினை பத்திர பதிவின் 33ம் பக்கத்தில் சர்வே எண்.3/4 கள்ளக்குறிச்சியில் 10 செண்டில் உள்ள கிணறும் மின்இணைப்பு 127ம் திரு. எம். அன்பழகன் மற்றும் அவரது சகோதரர்கள் திரு. ஜெகதீசன் திரு. ராஜேந்திரன் மற்றும் திரு. மனோகரன் ஆகிய அனைவருக்கும் கூட்டு என்று புலனாகிறது. எனவே, மேற்படி சர்வே எண் மாற்றம் செய்தது சரியானது அல்ல என்ற முடிவுக்கு வரப்படுகிறது.

4.9 செயற்பொறியாளர்/இப/கள்ளகுறிச்சி அவர்களின் கடிதம் செபொ/இப/கல்லை/தொநுஉ2/ கோ.கட்டு/005–7/2017 நாள் 9.5.2017ல் oversight காரணமாக சர்வே எண்.3/4 கள்ளக்குறிச்சியில் இருந்து 67/5Aல் சோமண்டர்குடிக்கு மாற்றப்பட்டு இருப்பதாக கூறியும் கால நீட்டிப்பு வழங்க தகுதி இல்லாத விண்ணப்பம் என கருதப்படுவதால் தலைமைப் பொறியாளருக்கு காலநீட்டிப்பு கோப்பு அனுப்பாமல் இருப்பதாகவும் கூறியுள்ளார்.

4.10 எனவே, விண்ணப்ப காலமான 1988ல் பொது சொத்துகளாக இருந்து 18.11.2004ம் ஆண்டின் பாகப்பிரிவினையில் 3/4ல் உள்ள கிணறு மற்றும் மின்இணைப்பு எண்127ல் திரு. எம்.

அன்பழகன் உட்பட நால்வரும் பொதுவில் அனுபவிக்கவேண்டும் என்று உள்ளதால் மேற்படி கிணறு மற்றும் மின்இணைப்பில் நான்கில் ஒரு பாகம் மனுதாரர் திரு. எம். அன்பழகன் அவர்களுக்கு சொந்தமாக இருந்தது.

4.11 மேலும், விண்ணப்ப காலத்தில் சர்வேஎண். 3/4ல் 1 ஏக்கர் 66 சென்ட நிலம் இருந்து அதில் பெரும் பகுதியான நிலம் 1 ஏக்கர் 56 சென்ட் பாகப்பிரிவினைப்படி திரு. ஜெகதீசனுக்கு சொந்தமாகி உள்ளது. சர்வே எண்.3/4ல் நால்வருக்கும் பொது என்பதும், சொத்துகள் பொதுவாக இருந்தபோது சர்வே எண்.3/4ல் மீதமுள்ள 10 சென்ட் நிலத்தில் கிணறு மற்றும் மின்இணைப்பு எண்.127ல் நால்வருக்கும் பொது என்பதும் சொத்துக்கள் பொதுவாக இருந்தபோது சர்வே எண்.3/4ல் உள்ள கிணற்றில் திரு. ஜெகதீசன் பெயரில் மின்இணைப்பு பெறப்பட்டு இன்னும் அவர் பெயரிலேயே இயங்கி வருகிறது. திரு. ஜெகதீசனுக்கு சொந்தமான நிலங்களை திரு. கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு கிரையம் தரப்பட்டு அவர் பெயருக்கு பட்டா மாற்றப்பட்டுள்ளது வில்லங்கச்சான்று மூலம் தெரியவருகிறது. ஆக சர்வே எண்.3/4 ஆனது சர்வே எண்.3/4A மற்றும் மற்றும் சர்வே எண்.3/4B என பிரிக்கப்பட்டது. சர்வே எண்.3/4A ஆனது திரு. கிருஷ்ணமூர்த்தி பெயருக்கு பட்டா மாற்றப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. சர்வேஎண்.3/4B ல் உள்ள 10 சென்ட் நிலத்தில் கிணறு மற்றும் மின்இணைப்பு தற்பொழுது திரு. எம். அன்பழகன் திரு. ராஜேந்திரன் மற்றும் திரு. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்களுக்கு கூட்டு சொந்தமாக உள்ளது.

4.12 எனவே, ஏற்கனவே சர்வே எண்.3/4Bல் திரு. எம். அன்பழகன் அவர்களுக்கு கிணறு மற்றும் மின் இணைப்பில் பாகம் உள்ளதால் அவருக்கு காலநீட்டிப்பு வழங்கி விவசாய மின்இணைப்பு தயார்நிலை பதிவு செய்து மின்இணைப்பு வழங்க முடியாத நிலை உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**5. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>**

5.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 23.5.2017 அன்று மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை நடத்தப்பட்டது.

5.2 மேல்முறையீட்டாளர் திரு. எம். அன்பழகன் அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

5.3 எதிர்மனுதாரர் சார்பில் திரு. B. வெங்கடேஷ்வரன் செயற்பொறியாளர்/கள்ளகுறிச்சி அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

**6. <u>கேட்புரை நாளில் மேல்முறையீட்டாளர் எடுத்துரைத்த வாதங்கள்</u>**

6.1 மேல்முறையீட்டாளர் தன்னுடைய மேல்முறையீட்டிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார். மேலும் தன்னுடைய எழுத்துப்பூர்வமான வாதுரையையும் சமர்ப்பித்தார்.

(i) அவரின் சர்வே எண்.3/4 கள்ளக்குறிச்சி கிராமத்திலிருந்து சர்வே எண்.67/5A சோமண்டர்குடி கிராமத்திற்கு 1988ல் விண்ணப்பிக்கும்போது தவறுதலாக சர்வே எண். குறிப்பிட்டுவிட்டதாக தெரிவித்து சர்வே எண்.மாற்றம் வேண்டி மின்வாரிய அலுவலகத்திற்கு 28.4.2014 அன்று விண்ணப்பித்தார். அதற்கு சர்வே எண். மாற்றம் அளித்து அவருக்கு எந்த ஒரு கடிதமும் அளிக்கப்படவில்லை. ஆனால், அவருக்கு அனுப்பிய 16.05.2017 நாளிட்ட கடிதத்தில் கு.எண்.செபொ/இப/கள்ள/தொநுஉ2/கோபெமா/எண்.004/2015 நாள் 20.3.2015 அன்று சர்வே எண். மாற்றம் செயற்பொறியாளர் இப/கள்ளக்குறிச்சி அவர்களால் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ii) சர்வே எண்.3/4 கள்ளகுறிச்சி கிராமத்தில் அவருக்கு ஏற்கனவே அனுபோக பாத்தியப்பட்டுள்ள மின்இணைப்பு எண்.127/ல் 1/4ல் பங்கு மட்டுமே இருந்ததால் அவர் அருகில் உள்ள சர்வே எண்.67/5A சோமண்டார்குடி கிராமத்திலுள்ள நிலங்களுக்கு நீர் பாய்ச்சி விவசாயம்

செய்ய முடியாமல் தவித்து வந்தார். அதனாலேயே அவர் சர்வே எண்.67/5A சோமண்டார்குடி கிராமத்திலுள்ள கிணற்றிற்கு புதியதாக விவசாயம் விண்ணப்பம் அளிக்க வேண்டி 1988ல் விண்ணப்பிக்கும்போது அப்போது இருந்த கிராம நிர்வாக அதிகாரி அளித்த ஆவணங்கள் சரியாக கவனிக்காமல் ஏற்கனவே அவருக்கு 1/4 பாகம் சொந்தமான மின்இணைப்பு இருந்ததை மீண்டும் தவறுதலாக சர்வே எண் 3/4 கள்ளகுறிச்சி பகிர்மானத்திற்கு விவசாயம் மின்இணைப்பு வேண்டி விண்ணப்பம் அளித்துவிட்டார்.

(iii) இதனை அவர் விண்ணப்பம் அளித்தபோது அப்போது விண்ணப்பத்தை பதிவு செய்யாமல் அவருக்கு மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்திருந்தால் தவறினை சரி செய்து 1988ம் வருடத்திலேயே சரியான சர்வே எண்ணுடன் விண்ணப்பம் பதிவு செய்திருப்பார். கிட்டதட்ட 27 வருடம் கழித்து தற்போது அவரது கோரிக்கையை மின்வாரியத்தினர் ஏற்க மறுப்பது மனிதாபிமானம் இல்லாத செயல் ஆகும்.

(iv) தலைமைப் பொறியாளர்/பகிர்மானம் அவர்கள் ஒரு விண்ணப்பதாரருக்கு விண்ணப்ப காலத்திலிருந்தே இரு இடங்களும் சொந்தமாக இருந்து மின் இணைப்பு ஏதும் பெறப்படாமல் இருந்தால் மட்டுமே தவறுதலாக விண்ணப்பித்த அடிப்படையில் சர்வே எண். மாற்றம் அனுமதி வழங்கலாம் இதுபோல் ஏற்கனவே ஒரு மின்இணைப்பு கூட்டாக இருந்து வேறு கிணற்றிற்கு தவறுதலாக விண்ணப்பிக்கப்பட்டது என சர்வே எண் மாற்றம் செய்ய வாரியத்தால் வழிவகை இல்லை என கூறப்பட்டுள்ளது. என 15.7.2016 அன்றைய கடிதத்தில் தெரிவித்துள்ளதாக பார்வையின் வாயிலாக அவருக்கு அனுப்பிய நகல் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வாரிய வழிவகை அவ்வாறு இருப்பின் அதற்குரிய வாரிய ஆணை எதுவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்படவில்லை.

(v) ஆனால், சர்வே எண் விண்ணப்பிக்கும்போது தவறாக குறிப்பிட்டு இருந்தால் செயற்பொறியாளரிடம் அனுமதி பெறலாம் என வாரிய ஆணை Memo NoSE/IEMC/EE3/AEE2/280/90

dated25.1.1990 மேலும், வாரிய ஆணை SE/IEMC/EE3/AE/FS23/382/dated 2.7.1999 சர்வே எண்ணில் உள்ள கிணற்றிற்கு மாற்றக்கோரியும் மின்பளுவில் மாற்றம் இல்லாமல் அனுமதி அளிக்கலாம் எனவும் உத்தரவு அளிக்கப்பட்டுள்ளது.

(vi) ஆகவே, மேற்கண்ட காரணங்களால் ஒரு விவசாயியை மேலும் அலைகழிக்காமல் அவர் ஏற்கனவே கேட்டுகொண்டதுபோல் சோமண்டார்குடி சர்வே எண்.67/5Aல் ஆழ்துளை கிணற்றிற்கு உடனடியாக மின்இணைப்பு வழங்க உத்தரவு அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறார்.

7. <u>கேட்புரை நாளில் எதிர்மனுதாரர் எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 திரு. வெங்கடேஷ்வரன் செயற்பொறியாளர்/கள்ளகுறிச்சி அவர்கள் தனது பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினாார்.

7.2 தலைமை பொறியாளர்/திட்டமிடல் அவர்களின் 22.7.11 அறிவிப்பின்படி ஒரு கிணற்றிற்கு ஒருவர் பெயரில் ஒரு விவசாய மின்இணைப்பு தான் இருக்க வேண்டும் என்றும் அவ்வாறு ஒரு மின்இணைப்பிற்கு மேல் வழங்காமல் இருப்பதற்காக விண்ணப்பதாரரிடம் வேறு விண்ணப்பம் எதுவும் மின்இணைப்பு கோரிய கிணற்றிற்கு முன்னர் சமர்ப்பித்து நிலுவையில் இல்லை என்றும் மின்இணைப்பு விண்ணப்பதாரரின் பெயரில் மேற்கண்ட கிணற்றில் இல்லை என்றும் அவ்வாறு உள்ளது என்று அறியப்பட்டால் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும் என்றும் ஒரு undertaking விண்ணப்பதாரர் சமர்ப்பிக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

7.3 எனவே, மேற்கண்ட ஆணையின்படி மேற்கண்ட விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்று வாதிட்டார்.

7.4 சர்வே எண்.3/4ல் உள்ள கிணற்றிலும் மின்இணைப்பிலும் மேல்முறையீட்டாளருக்கு 1/4 பாகம் உரிமை உள்ளது என்பதால், அதே கிணற்றிற்கு மீண்டும் மின்இணைப்பு கோரி விண்ணப்பம்

அளிக்கப்பட்டால் அது Duplicate விண்ணப்பம் என்று எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்றும் வாதிட்டார்.

7.4 மேலும் செயற்பொறியாளர்/கள்ளகுறிச்சி அவர்கள் due to oversight சர்வே எண். மாற்றத்திற்கு அனுமதி வழங்கியுள்ளார் என்றும் ஆனால், மேற்கண்ட விண்ணப்பம் ஒரு தகுதியற்ற விண்ணப்பம் என்பதால் கால நீட்டிப்பு வழங்க தகுதியற்றது என்றும் வாதிட்டார்.

## 8. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

8.1 இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

(i) இந்த மேல்முறையீட்டாளரின் வாதமான அவருக்கு சொந்தமான சோமண்டார் குடி கிராம புல எண்.67/5Aல் உள்ள கிணற்றிற்கு மின்இணைப்பு கோருவதாக கருதி தவறுதலாக கள்ளக்குறிச்சி கிராம புல எண்.3/4ல் உள்ள கிணற்றிற்கு மின்இணைப்பு கோரப்பட்டுவிட்டது என்பது ஏற்புடையதா ?

(ii) மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான பதிவு செய்யப்பட்ட விவசாய மின்இணைப்பு விண்ணப்பத்தின் சர்வே எண். கள்ளக்குறிச்சி 3/4 என்பதை மாற்றி சோமண்டார்குடி கிராம சர்வே எண்.67/5A என்று மாற்றி அவருக்கு தயார்நிலையை பதிவு செய்ய கால அவகாசம் கொடுக்கவேண்டும் என்பது ஏற்புடையதா ?

## 9. <u>கோரிக்கை ஒன்றிற்கான தீர்வு</u>

9.1 மேல்முறையீட்டாளர் கீழ்கண்ட வாதங்களை முன்வைத்துள்ளார்.

(i) 28.9.1988 விவசாய மின்இணைப்பு அவருக்கு சொந்தமான சோமண்டார்குடி புல எண்.67/5Aல் இருந்த கிணற்றிற்கு பதிலாக அவருக்கு கூட்டாக பாத்தியப்பட்ட கள்ளக்குறிச்சி கிராம புல எண்.3/4ல் உள்ள கிணற்றிற்கு தவறுதலாக கிராம நிர்வாக அலுவலர் அளித்த

ஆவணங்களை கொண்டு விண்ணப்பத்தை பதிவு செய்துவிட்டார். விண்ணப்ப பதிவு எண்.007/28.9.1988 ஆகும்.

(ii) மேற்கண்ட தவறு அவரின் விண்ணப்பத்திற்கு தயார்நிலையை பதிவு செய்ய 90 நாள் அறிவிப்பு 1.11.2010ல் அளிக்கப்பட்ட பொழுதுதான் தெரியவந்தது.

(iii) இரண்டு நிலங்களும் அருகே உள்ளதால் தான் மேற்கண்ட தவறு நடந்துவிட்டது என்று தெரிவித்து மேற்கண்ட விவசாய விண்ணப்பம் கள்ளக்குறிச்சி கிராமம் ச.எண்.3/4ல் உள்ள கிணற்றிற்கு என்று பதிவாகியுள்ளதை சோமண்டர்குடி கிராமம் சர்வே எண்.67/5Aல் கிணற்றிற்கு மாற்றும்படி கோரி தயார்நிலையை பதிவு செய்ய கால அவகாசம் 28.4.2014 நாளிட்ட மனுவில் கோரியிருந்தேன் என்றும் தெரிவித்துள்ளார்.

(iv) அவருடைய சர்வே எண்.மாற்றம் 20.3.2015ல் செயற்பொறியாளரின் எண்.செ.பொ/இப/கள்ள/தெநுஉ/கோ.பெ.மா/எண்.004/2015 நாள் 20.03.2015 மூலம் வழங்கப் பட்டுள்ளது.

(v) மேலும், சர்வே எண்.மாற்றம் மற்றும் கால அவகாசம் சம்பந்தமாக உதவி செயற்பொறியாளரின் 25.2.2015 மற்றும் 22.7.2015 நாளிட்ட கடிதங்களில் கோரியுள்ள ஆவணங்களையும் அளித்துள்ளார்.

(vi) அவர் விண்ணப்பம் சமர்ப்பிக்கும்போது வாரிய அதிகாரிகள் ஏற்கனவே மின்இணைப்பு உள்ள கிணற்றில் மின்இணைப்பு கோருகிறேன் என்று தெரிவித்து இருந்தால், அப்பொழுதே தவறு திருத்தப்பட்டு சரியான சர்வே எண்ணுடன் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கும். ஆனால், 27 வருடம் கழித்து எனது கோரிக்கையை மறுப்பது மனிதாபிமான மற்ற செயல் என்றும் வாதிட்டுள்ளார்.

(vii) சர்வே எண் விண்ணப்பிக்கும்போது தவறாக குறிப்பிட்டு இருந்தால் செயற்பொறியாளரிடம் அனுமதி பெறலாம் என்று வாரிய ஆணை SE/IEMC/EE3/AE/FS23/280/90 dated 25.1.1990லும் மேலும்

SE/IEMC/EE3/AE/FS23/382/dated 2.7.1999 ல் மின்பளுவில் மாற்றம் இல்லாமல் அனுமதிக்கலாம் என்று உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்று வாதிட்டு அந்த ஆணைகளின் நகல்களையும் அளித்துள்ளார்.

9.2 எதிர்மனுதாரர் கீழ்கண்ட வாதங்களை முன்வைத்துள்ளார்.

(i) மின்கட்டணம் நாம் அனைவரும் சரிசமமாக பங்கிட்டு செலவு செய்து கொள்ள வேண்டியது என்று பாகப்பிரிவினை பத்திரத்தில் பக்க எண்.12ல் குறிப்பிட்டுள்ளதால் மின்இணைப்பு எண்.127ல் திரு. அன்பழகனுக்கு கூட்டு உள்ளது என்று தெரிகிறது.

(ii) ஒரு விண்ணப்பதாரருக்கு விண்ணப்பகாலத்தில் இருந்தே இரு இடங்களும் சொந்தமாக இருந்து மின்இணைப்பு எதுவும் பெறப்படாமல் இருந்தால் மட்டுமே தவறுதலாக விண்ணப்பித்த அடிப்படையில் சர்வே எண்.மாற்றம் அனுமதி வழங்கலாம். இதுபோல் ஏற்கனவே ஒரு மின்இணைப்பில் கூட்டாக இருந்து வேறு கிணற்றிற்கு தவறாக விண்ணப்பிக்கப்பட்டது என சர்வே எண் மாற்றம் செய்ய வாரியத்தில் வழிவகை இல்லை என்றும் வாதிட்டுள்ளார்.

9.3 இந்த மேல்முறையீட்டாளர் விவசாய மின்இணைப்பு கோரும் விண்ணப்பத்தில் சோமண்டார் குடி கிராமம் சர்வே எண். 67/5A என்று குறிப்பிடுவதற்கு பதிலாக கள்ளகுறிச்சி கிராம சர்வே எண்.3/4 என்று தவறுதலாக கிராம நிர்வாக அலுவலரால் குறிக்கப்பட்டு விட்டது என்று வாதிட்டுள்ளார். இங்கு சர்வே எண் மாற்றும் சம்மந்தப்பட்ட செயற்பொறியாளரால் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதால் அதற்கு சமர்ப்பிக்கப்பட்ட கீழ்கண்ட ஆவணங்களை ஆராய விரும்புகிறேன்.

(i) வட்டாட்சியர் சான்று

(ii) உதவி செயற்பொறியாளரின் ஆய்வு அறிக்கை நாள் 1.11.2014

(iii) சர்வே எண். மாற்றம் செயற்பொறியாளரின் அனுமதி கடித நாள் 20.3.2015

9.4 மேற்கண்ட ஆவணங்களின் நகல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*(அ) வட்டாட்சியர் சான்று*

*ந.க.எண்.அ1/8395/2014* *வட்டாட்சியர் அலுவலகம்*
*நாள் 31.7.2014* *சங்கராபுரம்*

*வட்டாட்சியர் சான்று*

*கள்ளகுறிச்சி வட்டம், கள்ளகுறிச்சி கிராம எல்லையில் பழைய சர்வே எண்.3/4 புதிய சர்வே எண்.3/4பில் உள்ள கிணறு முனுசாமி மகன்கள் அன்பழகன் –1, இராஜேந்திரன்–2 ஆகியோருக்கும் ரங்கைய கவுண்டர் மகன் கிருஷ்ணமூர்த்திக்கும் கூட்டு சொந்தமாகும். திரு. எம். அன்பழகன் விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பிக்கும் பொழுது தனக்கு சொந்தமான சோமாண்டார்குடி கிராம சர்வே எண்.67/5ஏ என்று குறிப்பிடுவதற்கு பதிலாக அருகில் இருக்கும் பொது கிணற்றின் சர்வே எண்.3/4 என்று தவறுதலாக குறிப்பிட்டுள்ளார் கள்ளகுறிச்சி சர்வே எண்.3/4 மற்றும் சோமண்டார்குடி சர்வே எண்.67/5ஏ ஆகிய இரண்டு சர்வே எண்களும் திரு. அன்பழகன் மின்இணைப்பு வேண்டி விண்ணப்பிக்கும் முன்பே சொந்தமாகும். திரு. அன்பழகன் விண்ணப்பிக்கும் பொழுது கிணறு அமைந்திருக்கும் சோமண்டார்குடி கிராம சர்வே எண்.67/5ஏ என்று குறிப்பிடுவதற்கு பதிலாக அருகில் இருக்கும் கள்ளகுறிச்சி சர்வே எண்.3/4 என்று தவறுதலாக குறிப்பிட்டுள்ளார். மேலும் சர்வே எண்.67/5ஏல் உள்ள கிணறு வறட்சியால் மூடப்பட்டுவிட்டது. அதனால் சர்வே எண்.67/5ஏல் அமைந்திருக்கும் ஆழ்குழாய் கிணற்றில் போதுமான நீர் வசதி உள்ளதால் கள்ளகுறிச்சி சர்வே எண்.3/4 லிருந்து சோமண்டார்குடி சர்வே எண்.67/5ஏல் உள்ள ஆழ்குழாய் கிணற்றிற்கு மின்இணைப்பு வழங்கலாம் என்று சான்றளிக்கிறேன்.*

*ஒப்பம்/xx xx xx*
*வட்டாட்சியர்/ரங்காபுரம்*

(i) மேற்கண்ட சான்றின்படி கள்ளகுறிச்சி பழைய சர்வே எண்.3/4 புதிய சர்வே எண்.3/4பில் உள்ள கிணறு முனுசாமி மகன்கள் அன்பழகன், இராஜேந்திரன் மற்றும் ரங்கையா கவுண்டர் மகன் கிருஷ்ணமூர்த்திக்கும் கூட்டு சொந்தமாகும். திரு. அன்பழகன் விவசாய மின்இணைப்பு வேண்டி விண்ணப்பம் செய்யும்பொழுது தனக்கு சொந்தமான சோமண்டார்குடி கிராமம் சர்வே எண்.67/5A என்று குறிப்பிடுவதற்கு பதிலாக தவறுதலாக அருகில் இருக்கும் பொது கிணற்றின் சர்வே எண்.3/4ஐ குறிப்பிட்டுள்ளார். இரண்டு சர்வே எண்களும் திரு. அன்பழகனுக்கு

மின்இணைப்பிற்கு விண்ணப்பிப்பதற்கு முன்பே சொந்தம். சர்வே எண்.67/5Aல் உள்ள கிணறு வறட்சியில் மூடப்பட்டு புதியதாக ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டுள்ளது என்று சான்று அளித்துள்ளார்.

(ஆ) உதவி செயற்பொறியாளரின் ஆய்வு அறிக்கை நாள் 11.12.2014

*11.12.2014 அன்று கள்ளகுறிச்சி வருவாய் புல எண்.3/4 என்னால் நேரடி கள ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வில் புல எண்.3/4 என்பது 3/4B என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. அதில் புல எண்.3/4Bல் நல்ல நீர் வளம் உள்ள கிணறு மின்இணைப்பு 127–7.5 எச்.பி யுடன் திரு. மு. ஜெகதீசன் என்பவர் பெயரில் 20.7.1972ல் வழங்கப்பட்டு இயங்கி வருவது கண்டறியப்பட்டது. இம்மின்இணைப்பு திரு. அன்பழகன் அவர்கள் விண்ணப்பம் அளித்த காலம் 28.09.1988 ற்கு முன்பே பெறப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. மேலும், சோமண்டார் குடி புல எண். 67/5A என குறிப்பிடுவதற்கு பதிலாக தவறுதலாக கள்ளகுறிச்சி வருவாய் புல எண்.3/4 என குறிப்பிட்டு விண்ணப்பம் அளித்துள்ளார். மேலும், விண்ணப்பிக்கும் போது சோமாண்டார் கிராம புல எண்.67/5Aல் இருந்த கிணறு வறட்சியின் காரணமாக மூடப்பட்டு அதற்கு பதிலாக அதே புல எண்.67/5Aல் புதியதாக நீர் வளமுள்ள போர் கிணறு அமைத்துள்ளார் என்பது நேரடி கள ஆய்விலும் விசாரணையிலும் வருவாய் ஆவணங்கள் அடிப்படையிலும் தெரிய வருகிறது. எனவே தவறுதலாக கள்ளக்குறிச்சி வருவாய் புல எண்.3/4 என்பதை சோமாண்டார்குடி கிராம புல எண் 67/5A என் வருவாய் கிராமம் மாற்றம் மற்றும் கிணற்றிற்கு பதிலாக போர்கிணற்றிற்கு மின்இணைப்பு அளிக்குமாறு அளித்த வருவாய் ஆவண கோப்பினை பெற்று பரிந்துரை செய்து பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.*

*ஒப்பம்/ xxx xxx xx*
*உதவி செயற்பொறியாளர்/கிராமம்*
*கள்ளகுறிச்சி*

(i) மேற்கண்ட ஆவணத்தின்படி உதவி செயற்பொறியாளர்/கள்ளகுறிச்சி/கிராமம் அவர்கள் 11.12.2014ல் கள்ளகுறிச்சி புல எண்.3/4ல் உள்ள கிணற்றை ஆய்வு செய்து அதில் புல எண்.3/4 என்பது 3/4B என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அதில் உள்ள கிணற்றில் திரு. ஜெகதீசன் பெயரில் மின் இணைப்பு 127 20.7.1972ல் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்கண்ட மின்இணைப்பு திரு. மு. அன்பழகன் விண்ணப்பம் அளித்த நாளான 20.9.1988ற்கு முன்பே பெறப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், சோமண்டார்குடி கிராம புல எண். 67/5A என குறிப்பிடுவதற்கு பதிலாக கள்ளகுறிச்சி புல எண்.3/4 என தவறுதலாக குறிப்பிட்டு விண்ணப்பம் அளித்துள்ளார் என்று நேரடி களஆய்விலும், விசாரணையிலும் வருவாய் ஆவணங்களின் அடிப்படையிலும் தெரிகிறது என்றும் விண்ணப்ப காலத்திலிருந்த கிணறு வறட்சியின் காரணமாக மூடப்பட்டு புதிய ஆழ்குழாய் கிணறு 67/5Aல் அமைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து மேற்கண்ட சர்வே எண். மாற்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளார்.

<u>(இ) செயற்பொறியாளர்/கள்ளகுறிச்சி அவர்களால் சர்வே எண். மாற்றம் அனுமதி வழங்கப்பட்ட ஆவணம்.</u>

*தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்*
*செயற்பொறியாளர் அலுவலகம்,*
*இ&ப/கள்ளகுறிச்சி*

*<u>கு.ஆ.எண்.செ.பொ/இ&ப/கல்லை/தொநுஉ1/பெ.மா/பு.எண்.மா/எண்.004/2015, நாள் 20.3.2015</u>*

*பொருள்— மின்சாரம் விவசாய மின்இணைப்பு –சாதாரண முன்னுரிமை விண்ணப்ப எண்.7/ நாள் 28.9.1988 வருவாய் கிராமம் மாற்றம் புல எண்.மாற்றம் – அனுமதி அளித்தல் – தொடர்பாக*

*பார்வை— க.எண்.உ.செ.பொ/கி.கல்லை/வ.உ/கோ.கட்டு/அ.எண்.628/2015 நாள் 12.3.2015*

*********

*விண்ணப்பதாரரின் வேண்டுகோள் மற்றும் உதவி செயற்பொறியாளர்/கிராமம்/ கள்ளகுறிச்சி அவர்களின் பார்வை கடிதம் இவைகளை ஆராயும்போது அவரின் பரிந்துரையை ஏற்று கீழ்கண்ட மாற்றம் அளிக்கப்படுகிறது.*

*<u>வருவாய் கிராமம் மாற்றம் மற்றும் புல எண் மாற்றம்</u>*

*விண்ணப்ப புல எண். மாற்றம் – புல எண்.3/4 கள்ளக்குறிச்சி—லிருந்து 67/5A சோமாண்டார்குடிக்கு புல எண். மாற்றம் வருவாய் கிராமம் மாற்றம்*

*காரணம்* – *விண்ணப்பதாரர் திரு. அன்பழகன்*
*த/பெ முனுசாமி விண்ணப்பம் பதிவு*
*செய்யும்பொழுது சோமாண்டார்குடி*
*வருவாய் கிராம சர்வே எண்.67/5A*
*என்பதற்கு பதிலாக 3/4ல் கள்ளகுறிச்சி*
*என்று தவறுதலாக பதிவுசெய்ததால்*

*மேற்கண்ட மாற்றத்திற்கு உண்டான அசல் விண்ணப்பம் எண்.7, நாள் 28.9.1988 ஆனது திரு. அன்பழகன் த/பெ முனுசாமி பெயரில் பதிவு செய்யப்பட்டது இதன் விண்ணப்ப சர்வே எண்.3/4 கள்ளகுறிச்சி 7.5 HP.*

*ஒப்பம்/xxx xxx xx*
*செயற்பொறியாளர்/இப*
*கள்ளகுறிச்சி*

(i) மேற்கண்ட ஆவணத்தை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது செயற்பொறியாளர் கள்ளகுறிச்சி அவர்கள் உதவி செயற்பொறியாளர்/கள்ளகுறிச்சி/கிராமம்அவர்களின் பரிந்துரையை ஏற்று மேல்முறையீட்டாளரின் விவசாய விண்ணபத்தில் புல எண்.3/4 என்பதை சோமாண்டார்குடி கிராமம் 67/5A என்று மாற்றுவதற்கு அனுமதி அளித்துள்ளார். மாற்றத்திற்கான காரணம் புல எண். தவறாக விண்ணபத்தில் பதிவு செய்யப்பட்டது என்பது ஆகும்.

9.5 மேற்கண்ட ஆவணங்களை கூர்ந்து ஆராய்ந்து பார்க்கும்பொழுது வட்டாட்சியர் சான்று, உதவி செயற்பொறியாளரின் ஆய்வு அறிக்கை ஆகியவற்றை ஆராய்ந்துதான் மேற்கண்ட சர்வே எண். மாற்றம் செயற்பொறியாளரால் வழங்கப்பட்டுள்ளது.

9.6 மேற்கண்ட ஆவணங்களில் உள்ள தகவல்களின்படி இரண்டு சர்வே எண்களில் உள்ள கிணறுகளும் மேல்முறையீட்டாளர் விண்ணப்பம் சமர்ப்பிக்கும் நாளில் அவருக்கு உரிமை உள்ளது என்றும் அருகருகே உள்ளன என்றும் அறியமுடிகிறது.

9.7 மேலும், இது சம்பந்தமாக நான் திரு. அன்பழகன் அவர்கள் பதிவு செய்துள்ள விவசாய விண்ணபத்தை ஆராய விரும்புகிறேன்.

9.8 மேற்கண்ட விண்ணப்பத்தில் கிணறு உள்ள இடம் சர்வே எண்3/4 என்றும் அருகில் உள்ள மின்இணைப்பு எண் 127 சோமண்டர்குடி SS என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட சொத்தில் உரிமையாளர்கள் என்று திரு. எம். ஜெகதீசன் மற்றும் திரு. எம். அன்பழகன் இருவரின் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. எனவே, விண்ணப்பம் செய்யப்பட்ட கிணற்றின் /இடத்தின் உரிமையாளர்கள் திரு. ஜெகதீசன் மற்றும் அன்பழகன் ஆவார்கள்.

9.9 புல எண்.43/4 என்ற சொத்து சம்பந்தமான வில்லங்க சான்றிதழ் எண்.1864 /2017ல் தொடர் எண்.9,11 மற்றும் 13ல் உள்ள தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| தொடர் எண் (1) | (அ) சொத்து விவரம் (2) | எழுதி கொடுத்த நாள் (3) | (ஆ) ஆவணம் எந்த வகை எனும் விவரமும் ஆவண மதிப்பும் (4) | கட்சிக்காரர்கள் பெயர் | | பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் விவரம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | எழுதி கொடுத்த வர்கள் (5) | எழுதி வாங்கிக் கொண்ட வர்கள் (6) | தொகுதி (7) | பக்கம் (8) | எண்ணும் ஆண்டும் |
| 9 | அ.பு.ச.3/4 1.66ல் அபுபக்கர் சாய்பு நில(கி) பாதைக்கும் (மே)இதில் 1.12 செண்டு xx x xx x | 12.6.68 | வி ரூ.1700/– | பழனி கவுண்டர் கந்தசாமி | முனுசாமி நாயுடு | 913 | 283 | 342/1968 |
| 11 | அ.பு.ச.3/4 1.66ல் பொன்னம்மாள் நில(தெ) பாதைக்கும்(மே) கி clt கிரைய நில (வ) 0.54ம் மரவடை உட்பட xx x xx x | 30.4.68 | வி ரூ.2000/– | நடேசன் கவுண்டர் ஆறுமுகக் கவுண்டர் ராமசாமி கவுண்டர் | முனுசாமி நாயுடு | 928 | 171 | 1480/1968 |
| 13 | அ.புச.3/4 1.66ம் இதில் வெட்டப் போகும் புதிய கிணறும் | 16.6.70 | ஈ ரூ.5000/– கெடு 10 வருடம் | முனுசாமி ஷ கார்டியன் ராஜேந்திரன் மனோகரன் (மைனர்கள்) ஜெகதீசன் அன்பழகன் | கள்ளகுறிச்சி கூட்டுறவு நில வங்கி | 1028 | 209 | 1376/1970 |

9.10 மேற்பட்ட தொடர் எண்.9 மற்றும் 11ன் படி சர்வே எண்.3/4ல் 1.12 செண்டு ஆவண எண்.342/1968ன்படி முனுசாமி நாயுடுவால் கிரையம் செய்யப்பட்டது என்றும் 0.54 செண்டு ஆவண எண்.1480/1968ன் படி கிரையம் செய்யப்பட்டது என்றும் தெரியவருகிறது. எனவே, 30.4.68 அன்று முனுசாமி நாயுடு அவர்களுக்கு சர்வே எண்.3/4ல் 1.66 செண்டு நிலம் சொந்தமாக உள்ளது என்று அறியமுடிகிறது. மேற்கண்ட வில்லங்க எண். 1864/2017ன் படி 16.6.1970ல் கள்ளகுறிச்சி கூட்டுறவு நில வங்கியிடம் ஈடு வைப்பதற்காக சர்வே எண்.3/4ல் உள்ள 1.66 செண்டு நிலம் எழுதி கொடுத்தவர்கள் முனுசாமி, திரு. ராஜேந்திரன், மற்றும் மனோகரனுக்காக முனுசாமி ஜெகதீசன் மற்றும் அன்பழகன் ஆகியோர் என்பதால் அவர்கள் உரிமையாளர் என்று தெரிகிறது. மேற்கண்ட தகவல் 1965 முதல் 1986 டிசம்பர் வரை உள்ள தகவல்கள் மேலும், 1.1.87 முதல் 1.3.2015 வரையிலான வில்லங்க சான்றிதழ் எண்.1020 நாள் 2.3.2015ல் கீழ்கண்ட தகவல்கள் உள்ளன.

"18.11.2004ல் partition between family இதில் மேற்கண்ட சொத்துக்களை எழுதி கொடுத்தவர் மற்றும் எழுதி வாங்கியவர் என்பதில் ஞானம்மாள் எம்.ஜெகதீசன், எம்.அன்பழகன் எம்.ராஜேந்திரன், எம்.மனோகரன், சி.வசந்தா, கு.இளவரசி மற்றும் சு.செண்பகம் என்று திரு. முனுசாமி அவர்களின் சட்டபூர்வமான வாரிசுகள் அனைவரின் பெயரும் உள்ளது.

9.11 எனவே, 18.11.2004ல் குடும்ப பாக பிரிவினை நடக்கும்வரை கள்ளக்குறிச்சி புல எண்.3/4ன் உரிமையாளர் திரு. முனுசாமி, அல்லது (அவர் இறந்த பின்பு) அவரின் சட்டபூர்வமான வாரிசுகள் அனைவரும் என்றும் தெரிகிறது.

9.12 மேலும், சர்வே எண்.67/5Aன் விவசாய விண்ணப்பம் சமர்ப்பிக்கும்பொழுது உரிமையாளர் என்று தெரிந்து கொள்ள சமர்ப்பிக்கப்பட்ட கிரயபத்திரத்தை ஆராய்ந்து பாக்கும்பொழுது மேற்கண்ட சர்வே எண்.67/5ல் 50 1/2 செண்ட் 3.7.1980ல் ஆவண எண்.1373ன்படி திரு. எம். ஜெகதீசன் மற்றும் அவரின் தம்பி அன்பழகன் ஆகியோருக்கு கிரயம் செய்யப்பட்டுள்ளது என்று தெரிகிறது.

9.13 மேலும், வில்லங்க சான்றிதழ் 1021 நாள் 2.3.2015ன் படி சோமாண்டார்குடி சர்வே எண்.67/5ல் உள்ள 78 சென்ட் நிலத்திலும் 1.1.87 முதல் 1.3.2015 வரை எந்த விதமான வில்லங்கமும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

9.14 மேற்கண்ட பத்தி 9.11ல் உள்ள தகவல்களின்படி 18.11.2004 வரை கள்ளக்குறிச்சி புல எண்.3/4ன் உரிமையாளர்கள் திரு. முனுசாமி நாயுடு, அல்லது அவரின் சட்டபூர்வமான வாரிசுகள் என்று தெரிகிறது.

9.15 பத்தி எண்.9.12 மற்றும் 9.13ல் உள்ள தகவல்களின்படி சோமாண்டார்குடி சர்வே எண்.67/5ல் உள்ள நிலத்தின் உரிமையாளர்கள் திரு. ஜெகதீசன் மற்றும் திரு. அன்பழகன் ஆகிய இருவர் மட்டுமே ஆகும்.

9.16 திரு. எம். அன்பழகன் பெயரில் பதிவு செய்யப்பட்ட விவசாய விண்ணபத்தில் பங்குதாரர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது திரு. ஜெகதீசன் மற்றும் திரு. அன்பழகன் மட்டுமே.

9.17 திரு. ஜெகதீசன் மற்றும் திரு. அன்பழகன் ஆகிய இருவருக்கும் மட்டும் விவசாய விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட நாளில் உரிமையாக இருந்தது, சோமண்டார்குடி புல எண்.67/5 தான் ஆனால் பத்தி 9.11ல் உள்ள தகவல்களின்படி கள்ளகுறிச்சி புல எண்.4/3 என்பது திரு. முனுசாமி அல்லது அவரின் சட்டபூர்வமான வாரிசகளுக்கும் சேர்ந்து உரிமை உள்ள நிலம் ஆகும்.

9.18 எனவே, விண்ணபத்தில் நிலத்தின் உரிமையாளர்கள் என்று திரு. அன்பழகன் மற்றும் திரு.ஜெகதீசன் இருவருடைய பெயர்கள் மட்டுமே கிராம நிர்வாக அலுவலரால் குறிப்பிடப்பட்டுள்ளதால், விண்ணப்பம் செய்யும்பொழுது சோமண்டார்குடி புல எண் 67/5 என்பதற்கு பதிலாக கள்ளகுறிச்சி புல எண்.4/3 என்று தவறுதலாக எழுதப்பட்டுவிட்டது என்ற மேல்முறையீட்டாளரின் வாதம் எனக்கு ஏற்புடையதாக உள்ளது.

## 10. <u>வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வு</u>

10.1 எதிர்மனுதாரர் ஒரு விண்ணப்பதாரருக்கு விண்ணப்ப காலத்தில் இருந்தே இரு இடங்களும் சொந்தமாக இருந்து மின்இணைப்பு எதுவும் பெறப்படாமல் இருந்தால் மட்டுமே தவறுதலாக விண்ணப்பித்த அடிப்படையில் சர்வே எண் மாற்றம் வழங்கலாம். ஆனால், ஒரு மின்இணைப்பு கூட்டாக இருந்து தவறுதலாக விண்ணப்பிக்கப்பட்டது என்று சர்வே எண் மாற்றம் செய்ய வாரியத்தின் விதிகளில் வழி இல்லை என்று வாதிட்டுள்ளார்.

10.2 மேலும், பாகப்பிரிவினை பத்திரத்தின் பக்கம் 12ல் மின்கட்டணம் நாம் அனைவரும் சரியாக பங்கீட்டு செலவு செய்து கொள்ள வேண்டும் என்பதால் மேல்முறையீட்டாளருக்கு மின்இணைப்பு எண்.127ல் பங்கு உள்ளது என்று தெளிவாகத் தெரிகிறது. எனவே, சர்வே எண் மாற்றம் oversightல் செயற்பொறியாளரால் செய்யப்பட்டுள்ளது. எனவே, அந்த சர்வே எண் மாற்றம் தவறு என்று வாதிட்டுள்ளார்.

10.3 தலைமை பொறியாளர்/திட்டமிடல் அவர்களின் 22.7.11 அறிவிப்பின்படி ஒரு கிணற்றிற்கு ஒருவர் பெயரில் ஒரு விவசாய மின்இணைப்பு தான் இருக்க வேண்டும் என்றும் அவ்வாறு ஒரு மின்இணைப்பிற்கு மேல் வழங்காமல் இருப்பதற்காக விண்ணப்பதாரரிடம் வேறு விண்ணப்பம் எதுவும் மின்இணைப்பு கோரிய கிணற்றிற்கு முன்னர் சமர்ப்பித்து நிலுவையில் இல்லை என்றும், மின்இணைப்பு எதுவும் விண்ணப்பதாரரின் பெயரில் மேற்கண்ட கிணற்றில் இல்லை என்றும் அவ்வாறு உள்ளது என்று அறியப்பட்டால் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும் என்றும் ஒரு உறுதிப்பத்திரம் (Undertaking) விண்ணப்பதாரர் சமர்ப்பிக்கவேண்டும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

10.4 மேல்முறையீட்டாளரும் தனக்கு சர்வே எண்.3/4ல் உள்ள மின்இணைப்பு எண்.127ல் பங்கு இல்லை என்று வாதிடவில்லை. 1/4 பங்கு உண்டு என்பதை ஒத்துக் கொள்கின்றார். ஆனால், சோமண்டர்குடி புல எண்.67/5A என்பதற்கு பதிலாக கள்ளகுறிச்சி புல எண்.3/4 என்று தவறுதலாக

விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதால் சர்வே எண் மாற்றம் வழங்கி அந்த விண்ணப்பத்திற்கு மின்இணைப்பு வழங்க வேண்டும் என்று தான் வாதிட்டுள்ளார்.

**10.5** மேலும், சர்வே எண் விண்ணப்பிக்கும்பொழுது தவறாக குறிப்பிட்டு இருந்தால் செயற்பொறியாளரிடம் அனுமதி பெற்று சர்வே எண் மாற்றம் பெறலாம் என்று Memo NoSE/IEMC/EE3/AEE2/280/90 dated **25.1.1990**ல் உள்ளது என்றும் மேலும், வாரிய ஆணை SE/IEMC/EE3/AE/ FS23/ 382/dated **2.7.1999**ல் மின்பளுவில் மாற்றம் இல்லாமல் சர்வே எண் மாற்றி வழங்கலாம் என்று உள்ளது என்றும் வாதிட்டுள்ளார்.

**10.6** மேலும், அவரின் விண்ணப்பத்தை பதிவு செய்யும்பொழுது ஏற்கனவே விவசாய மின்இணைப்பில் பங்கு உள்ள சர்வே எண்ணில் மீண்டும் விண்ணப்பம் சமர்ப்பிப்பதால் பதிவு செய்ய முடியாது என்று தெரிவிக்கப்பட்டு இருந்தால் சரியான சர்வே எண்ணுடன் வேறு விண்ணப்பம் பதிவு செய்திருக்க முடியும். ஆனால், விண்ணப்பம் பதிவு செய்து 27 வருடங்கள் முடிந்த பின்பு அவருடைய கோரிக்கையை மறுப்பது மனிதாபிமானமற்ற செயல் என்றும் வாதிட்டுள்ளார்.

**10.7** எதிர்மனுதாரர் தலைமை பொறியாளர், திட்டமிடல் அவர்களின் **22.7.2011** நாளிட்ட ஆணையை சுட்டிக்காட்டி புல எண்.**3/4**ல் ஏற்கனவே உள்ள மின்இணைப்பு எண்.**127**ல் பங்கு உள்ளதால் புல எண். மாற்றம் செய்ய முடியாது என்று வாதிட்டுள்ளார். அந்த **22.7.2011** நாளிட்ட ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“To avoid effecting of more than one agricultural service connection in the name of same person in the same well/bore well and to avoid SF correcetion for such cases the following instructions are issued.*

*Necessary undertaking may be obtained from the applicant at the time of registering the application stating that*

*i) There is no other application registered and pending in his name for the same well/bore well and agricultural service connection availed in the well/bore well in his name.*

*ii) If such type of cases noticed then the application is liable for cancellation and no change of well is permitted in such cases.*

*Filed officials may also be instructed to inspect cases involving shifting/change of SF No. before approving the cases"*

10.8 மேற்கண்ட ஆணையை கூர்ந்து படிக்கும்பொழுது ஒரு கிணற்றில் ஒன்றுக்கும் மேற்பட்ட விவசாய மின்இணைப்பு வழங்காமலிருக்க விண்ணப்பத்தை பதிவு செய்யும்பொழுது கீழ்கண்ட உறுதிமொழி பெறவேண்டும்.

(i) வேறு விண்ணப்பம் எதுவும் விண்ணப்பதாரரின் பெயரில் மேற்கண்ட கிணறு/ஆழ்துளை கிணற்றில் நிலுவையில் இல்லை என்றும் விவசாய மின்இணைப்பு எதுவும் விண்ணப்பதாரரின் பெயரில் பெறப்படவில்லை என்றும்,

(ii) அவ்வாறு பின்னர் தெரியவந்தால் விண்ணப்பம் ரத்து செய்யப்படும் என்றும் கிணறு மாற்றம் கொடுக்கப்படமாட்டாது என்றும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், கள அலுவலர்களால் புல எண் மாற்றத்திற்கு முன்பு சம்பந்தப்பட்ட இடம் ஆய்வு செய்யப்படவேண்டும் என்றும் தெரிகிறது.

10.9 மேற்கண்ட உத்தரவு புதியதாக பதிவு செய்யும் விண்ணப்பங்களுக்காக 22.7.2011ல் வழங்கப்பட்டது. ஆனால், இந்த வழக்கில் உள்ள விண்ணப்பம் 1988ல் பதிவு செய்யப்பட்டது ஆகும். மேலும், இந்த வழக்கில் புல எண் மாற்றம் கோருவது தவறுதலாக புல எண் விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்ற காரணத்தினால் என்று வாதிடப்படுவதால் மேற்கண்ட தலைமை பொறியாளரின் ஆணையை சுட்டிக்காட்டி புல எண் மாற்றம் செய்ய முடியாது என்ற எதிர்மனுதாரரின் வாதம் ஏற்புடையது அல்ல.

**10.10** இங்கு மேல்முறையீட்டாளர் வாரிய ஆணை Memo No.SE/IEMC/EE3/AEE2/280/90 dated**25.1.1990** ஐ சுட்டிக்காட்டி வாரிய விதிகளின்படி தவறாக குறிக்கப்பட்ட சர்வே எண் செயற்பொறியாளரின் அனுமதியின் பேரில் மாற்றப்படலாம் என்று வாதிடுவதால் அந்த குறிப்பாணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"XXXX XXXXX XXXXXXXX*

*These representation have been examined and the following instructions are issued :-*

*1. Wherever parties represent that the wells for which they had applied are situated in a different SF No.as against the SF No. mentioned in the original applications and that the SF No. was furnished wrongly by the Revenue authorities in the applications, these applications may be considered under online / one pole extension scheme subject to the following conditions ;*

*(a) The parties should produce certificate from the Revenue authorities to the effect that the well for which supply is required now is the same as the one for which the applications was preferred and that the discrepancy in (xx) survey No. is only due to clerical error like oversight etc.,*

*(b) The filed verification may also be made if considered necessary.*

*If genuine, necessary approval for change of SF No. may be accorded by the Executive Engineers and the parties intimated in writing by the Executive Engineer to enter their readiness in the section office. "*

**10.11** மேற்கண்ட உறுப்பினர்(பகிர்மானம்) குறிப்பாணையின்படி விண்ணப்பத்தில் சர்வே எண் தவறாக வருவாய் துறை அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டு இருந்தால் online/one pole extension திட்டத்தில் விண்ணப்பங்களை கீழ்கண்ட நிலையில் ஏற்றுக் கொள்ளப்படலாம்.

(a) விண்ணப்பதாரர்கள் வருவாய்துறை அதிகாரிகளிடமிருந்து விண்ணப்பத்தில் உள்ள கிணறும் தற்பொழுது மின்இணைப்பு கோரும் கிணறும் ஒன்றேதான் என்றும் சர்வே எண் எழுத்து பிழை, அல்லது கவனக்குறைவு etc காரணமாக ஏற்பட்டது என்று தெரிவிக்க வேண்டும்.

(b) கள ஆய்வு தேவையெனில் செய்யப்படவேண்டும். சர்வே எண் மாற்றம் மெய்யானதாக (Genuine) இருந்தால் செயற்பொறியாளர் மேற்கண்ட மாற்றத்தை வழங்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

10.12 இந்த வழக்கில் வட்டாட்சியர் சங்கராபுரம் அவர்கள் தன்னுடைய 30.7.2014 நாளிட்ட சான்றிதழில் மேற்கண்ட விண்ணப்பத்தில் சோமண்டர்குடி கிராமம் சர்வே எண்.67/5A என்பதற்கு பதிலாக அருகில் இருக்கும் கள்ளக்குறிச்சி சர்வே எண்.4/3 என்று தவறுதலாக திரு. அன்பழகன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார் என்று சான்று அளித்துள்ளார். மேலும், இரண்டு கிணறுகளும் அவர் விண்ணப்பம் சமர்ப்பிக்கும் முன்பே சொந்தம் என்றும் தெரிவித்துள்ளார்.

10.13 உதவி செயற்பொறியாளரும் 11.12.2014ல் மேற்கண்ட இடத்தை கள ஆய்வு செய்து விண்ணப்பதாரர் தவறுதலாக விண்ணப்பத்தில் சோமாண்டார்குடி சர்வே எண்.67/5Aக்கு பதிலாக கள்ளகுறிச்சி 3/4 என்று விண்ணப்பம் அளித்துள்ளதாக நேரடி கள ஆய்விலும் விசாரணையிலும் வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் தெரிய வருகிறது என்று தெரிவித்து சர்வே எண் மாற்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளார்.

10.14 மேலும், செயற்பொறியாளர் கள்ளகுறிச்சி அவர்களும் உதவி செயற்பொறியாளரின் பரிந்துரையின் பேரில் மேற்கண்ட விண்ணப்பத்தினை சோமாண்டார்குடி சர்வே எண்.67/5Aல் உள்ள கிணற்றிற்கு என்று சர்வே எண். மாற்றம் அனுமதி 20.3.2015ல் வழங்கியுள்ளார்.

10.15 என்னுடைய முதல் வழக்கெழு வினாவிற்கான தீர்வின்படி சர்வே எண் விண்ணப்பத்தில் தவறுதலாக சோமண்டார்குடி சர்வே எண்.67/5Aக்கு பதிலாக கள்ளகுறிச்சி சர்வே எண். 3/4 என்று விண்ணப்பத்தில் பதிவு செய்துள்ளேன் என்ற வாதம் ஏற்புடையது என்று தீர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும், நேரடி கள ஆய்விலும் விசாரணையிலும், வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் உதவி செயற்பொறியாளர் மேற்கண்ட சர்வே எண் மாற்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளார். வட்டாட்சியர், சங்கராபுரம் அவர்களும் பரிந்துரை செய்துள்ளார். எனவே, மேற்கண்ட சர்வே எண் மாற்றம் உரிமைதாரரின் உறுப்பினர் (பகிர்மானம்) அவர்களின் 25.1.1990 நாளிட்ட ஆணைக்கு இணங்க உள்ளது என்றும் அறிய முடிகிறது.

10.16 மேற்கண்ட நிலையில் செயற்பொறியாளரின்/கள்ளகுறிச்சி அவர்களால் 20.3.2015 நாளிட்ட குறிப்பாணையில் வழங்கப்பட்ட சர்வே எண் மாற்றம் சரிதான் என்று தீர்வு செய்யப்படுகிறது.

10.17 இந்த மேல்முறையீட்டாளருக்கு தயார்நிலையை பதிவு செய்ய கோரி அறிவிப்பு 1.11.2010 நாளிட்ட கடிதம் மூலம் வழங்கப்பட்டுள்ளது. அந்த கடிதத்தில் கொடுக்கப்பட்டுள்ள 30 நாட்கள் அவகாசம் 3.12.2010இல் முடிகிறது. மேல்முறையீட்டாளர் 28.4.2014ல் சர்வே எண் மாற்றம் மற்றும் தயார்நிலையை பதிவு செய்ய கால அவகாசம் கோரி மனு செய்துள்ளார். மேற்கண்ட மனு தயார்நிலை பதிவு செய்ய கொடுக்கப்பட்ட அறிவிப்பின் கெடு நாள் முடிந்து 5 வருடங்களுக்குள் கால அவகாசம் கோரும் மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதால் மேற்கண்ட விண்ணபத்திற்கு தயார்நிலையை பதிவு செய்ய உரிய அறிவிப்பு வழங்கி அந்த தயார்நிலை முன்னுரிமையின்படி மின்இணைப்பு வழங்கப்படவேண்டும் என்றும் தீர்வு செய்யப்படுகிறது.

10.18 இங்கு சமர்ப்பிக்கப்பட்ட விற்பனை பத்திரம் வில்லங்க சான்றிதழ்களின்படி சோமண்டர்குடி சர்வே எண்.67/5 என்ற நிலம் தான் விண்ணப்பம் சமர்ப்பித்த காலங்களில் மேல்முறையீட்டாளருக்கு திரு. எம். ஜெகதீசனுக்கும் சொந்தம் என்று தெரிகிறது. ஆனால், சர்வே எண் மாற்றம் 67/5A என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட சர்வே எண்.67/5 தான் தற்பொழுது பிரிக்கப்பட்டு சர்வே எண்.67/5A என்று மாற்றப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும் என்றும் அவ்வாறு இருந்தால் மட்டுமே மேற்கண்ட சர்வே எண் மாற்றம் சரி என்பதும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**11. முடிவுரை**

11.1 மேற்கண்ட பத்திகளில் உள்ள வழக்கெழு வினா ஒன்று, இரண்டு ஆகியவற்றிற்கான தீர்வின்படி மேல்முறையீட்டாளரின் விவசாய விண்ணப்பத்திற்கு செயற்பொறியாளரால் 20.3.2015 நாளிட்ட குறிப்பாணையில் வழங்கப்பட்ட சர்வே எண் மாற்றம் சரிதான் என்று தீர்வு

செய்யப்பட்டுள்ளதால் மேல்முறையீட்டாளருக்கு அவரின் தயார்நிலையை பதிவு செய்ய உரிய அறிவிப்பு வழங்கி அந்த தயார்நிலை பதிவின் முன்னுரிமைப்படி அவருக்கு சோமண்டார்குடி சர்வே எண் 67/5Aல் உள்ள கிணற்றிற்கு மின்இணைப்பு வழங்க வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**11.2** இங்கு சமர்ப்பிக்கப்பட்ட விற்பனை பத்திரம் வில்லங்க சான்றிதழ்களின்படி சோமண்டார்குடி சர்வே எண்.67/5 என்ற நிலம் தான் விண்ணப்பம் சமர்ப்பித்த காலங்களில் மேல்முறையீட்டாளருக்கும் திரு. எம். ஜெகதீசனுக்கும் சொந்தம் என்று தெரிகிறது. ஆனால், சர்வே எண் மாற்றம் 67/5A என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட சர்வே எண்.67/5 தான் தற்பொழுது பிரிக்கப்பட்டு சர்வே எண்.67/5A என்று மாற்றப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும் என்றும் அவ்வாறு இருந்தால் மட்டுமே மேற்கண்ட சர்வே எண் மாற்றம் சரி என்பதும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**11.3** மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண்.23/2017 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ.தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>
1) திரு. எம். அன்பழகன்,
த/பெ முனுசாமி,
18/20, சுபேதார் தெரு,
கள்ளக்குறிச்சி – 606 202.

2) மேற்பார்வை பொறியாளர்,
கள்ளக்குறிச்சி மின் பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சிவாஜி நகர், லயன்ஸ் கிளப் பில்டிங்,
கள்ளக்குறிச்சி – 606 202.

3)  தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின்நுகர்வோர் குறைதீர்க்கும்  மன்றம்,
கள்ளக்குறிச்சி மின் பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சிவாஜி நகர், லயன்ஸ் கிளப் பில்டிங்,
கள்ளக்குறிச்சி – 606 202.

4)  தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) –    மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.